[24th July 1964

### வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணை

* 690 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமான கரும்பு கிடைப்பதால் Gur (Movement Control) Order 1963-ஐ ரத்து செய்யும் உத்தேச முண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த உணவு-வேளாண்மை அமைச்சு (உணவுத் துறை), 1962-ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் 1963-ம் ஆண்டு வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையைப் பிறப்பித்தது. எனவே, மாநிலங்களிடையே வெல்லப் போக்குவரத்து மீதுள்ள தடையை எடுப்பதுபற்றி மத்திய அரசாங்கமே முடிவு செய்யவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், வெல்லப் போக்குவரத்தைத் தடை செய்வது சாதாரணமாக சர்க்கரை ஆலை அல்லாத மற்ற பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்யாதவர்களை பாதிக்கிறது என்பதற்காக ஏற்பட்டது. கரும்பு உற்பத்தி செய்கிற பகுதியில் சரியான பாதுகாப்பு இருப்பதால் இந்தத் தடையை நீக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய முடிவு என்று சொன்னேன். என்ன செய்வேண்டுமென்பதைப் பற்றி அவர்கள் தான் முடிவு எடுக்கவேண்டும்.

### கிராம ஊழியர்களின் ஊதிய உயர்வு

* 691 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராம ஊழியர்களான தலையாரி, தண்டல்காரன் இவர்கள் ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : The matter is under the consideration of the Government.

### தஞ்சை மாவட்ட கிராம அதிகாரிகள்

* 692 கேள்வி.—திரு. செ. மாதவன் :<br>
திரு. கோ. சி. மணி :<br>
திரு. கரு. சீமைச்சாமி :<br>
திரு. து. ப. அழகமுத்து :<br>
திரு. ஆ. கு. சுப்பையா :<br>
} கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கிராம அதிகாரிகள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்தனரா ?